**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070120224918

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.04.2022

Accepted: 09.06.2022

Published: 01.07.2022

Citation:
Ligoriya, A., and S. Priya. "Percussion Instruments of Sangam Tamils." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 1, 2022, pp. 39–43.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i14918.

*Corresponding Author:
ligoriyasaga@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Percussion Instruments of Sangam Tamils

**A. Ligoriya**
*Ph.D. Researcher (Roll No: 1925120023), Department of Tamil Studies*
*Annamalai University, Annamalai Nagar, Tamilnadu, India*
*https://orcid.org/0000-0001-9583-7169*

**S. Priya**
*Tamil Department, Government Arts College, C. Mudlur*
*Chidambaram, Tamil Nadu, India*

**Abstract -** Among the various arts that appeared in the world, music was the first to appear. Tamils led a life in harmony with music. When man first came with animals and hunting industries, music was only a sound signal and it was directly related to their labor. They believed that playing musical instruments would increase the hunting industry. They lived by sharing the food they got from hunting. Humans expressed their inner joy through dancing and making sounds. Tamils have been able to compare the sounds made by birds, animals, beetles, toads and waterfalls with the sound of musical instruments. This article examines how the people of the Sangam period used percussion instruments after realizing them.

**Key Words:** Music, Musical Instrument, String E Percussion, Heavy Instrument, String Instrument

**References**

1. Silapathikaram Puliyurkesikan Urai, Chennai, Sri Senpaga Pathipagam.
2. Purananuru, Ambathur, Chennai, New Century House (P) Ltd., 41-B, SIDCO Industries.
3. Natrinai, Ambathur, Chennai, New Century House (P) Ltd., 41-B, SIDCO Industries.

# சங்ககாலத் தமிழர்களின் தோற்கருவிகள்

*அ. விகோரியா*
முனைவர் பட்ட ஆய்வாளர் (சுழல் எண்: 1925120023)
தமிழியல் துறை, அண்ணாமலைப்பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்

*ச. பிரியா*
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி
சி.முட்லூர், சிதம்பரம்

**ஆய்வுச்சுருக்கம்**
*உலகில் தோன்றிய கலைகளில் முதல் கலையாகத் தோன்றியது இசைக்கலை. தமிழர்கள் இசையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினர். முதன்முதலில் மனிதன் விலங்குகளோடும் வேட்டைத் தொழில்களோடு வந்த போது இசை ஒலிக்குறியாக மட்டும் இயங்கியது அவர்களுடைய உழைப்போடு அது நேரடித் தொடர்பு கொண்டதாய் இருந்தது. இசைக்கருவிகளை இசைத்தால் வேட்டைத் தொழில் பெருகும் என்ற நம்பிக்கை அம்மக்களிடம் இருந்தது. வேட்டையில் கிடைத்த உணவுப் பொருட்களைப் பகிர்ந்து உண்டு வாழ்ந்தனர். மனிதர்கள் தமது அகத்தின் வழி வெளிபடுத்தும் மகிழ்ச்சியை ஆடலின் வாயிலாகவும், ஒலி எழுப்புவதன் வாயிலாகவும் வெளிகொணர்ந்தனர். பறவை, விலங்கு, வண்டு, தேரை, அருவி ஆகியவை எழுப்புகின்ற ஒலிகளை இசைக்கருவிகளின் ஒலியுடன் ஒப்புமைப்படுத்திப் பார்க்கும் ஆற்றல் கொண்டவர்களாகத் தமிழர் இருந்துள்ளனர். அவற்றை உணர்ந்து சங்க கால மக்கள் தோற்கருவிகளை எவ்வாறு பயன்டுத்தினர் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**முக்கிய வார்த்தைகள்:** *இசைக்கலை, இசைக்கருவி, தோற்கருவி, துளைக்கருவி, கன கருவி, நரம்புக் கருவி*

## முன்னுரை

தமிழர்களுக்கு இசை தொப்புள் கொடி பந்தமாக இருந்து வருகிறது. உயிரும் உடம்பும் ஒன்றிப் போவது இசை. ஒரு தாய் கருவுற்றால் நலங்குப்பாடல், குழந்தைப் பிறந்ததும் தாலாட்டு பாடல், சிறுவயதில் நிலாப்பாடல், இளம்வயதில் காதல் பாடல், திருமணத்திற்கு திருமணப்பாடல், மரணமடைந்தால் ஒப்பாரி எனத் தமிழன் வாழ்வு பிறப்பு முதல் இறப்பு வரை இசையோடு ஒன்றியிருக்கிறது.

## இசைக்கருவிகளின் வகைகள்

தமிழர்களின் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இசை முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருந்தது. இவை பொழுதுபோக்கு நிலையில் தொடங்கினாலும் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் அங்கமாக இசையும், இசைக் கருவிகளும் விளங்குகின்றன. இசை எழுப்பும் வாயில்களைக்கொண்டு அவை நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை:

1. நரம்புக் கருவிகள்
2. துளைக்கருவிகள்
3. தோற்கருவிகள்
4. கன கருவிகள்

**முடிவுகள் மற்றும் கலந்துரையாடல்**

தோற்கருவிகள் இசைகளுக்கெல்லாம் உயிராக விளங்கும். தோல்களால் போர்த்தப்பட்டுள்ள கருவிகள் தோற்கருவிகள் என்று குறிப்பிடுகின்றன. தோற்கருவிகளின் வகைகளைக் குறிக்கிறது சிலப்பதிகாரம்,

**பேரிகை படகம் இடக்கை உடுக்கை**
**சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை**
**தமிலை குடமுழாத் தக்கை கணப்பறை**
**தமருகம் தண்ணுமை தாவில் தடாரி**
**அந்தரி முழவொடு சந்திர வளையம்**
**மொந்தை முரசே கண்விடு நும்பு**
**நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்**
**மாசில் தருணிச்சம் விரலேறு பாகம்**
**தாக்க உபர்வகம் துடிப்பெரும் பறையென**
**மிக்க நூலோர் விரித்துரைத் தனரே**
**(சிலம்பு: 3:27)**

என 34 வகையான தோற்கருவிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அக்காலத்தில் செய்திகள் அறிவிக்கத் தோற்கருவிகளைத் தான் பயன்படுத்தினர். இன்று மக்களிடையே பயன்பாட்டிற்குரிய தோற்கருவிகள் உடுக்கை, உறுமி, கஞ்சிரா, கடம், கிணை, தண்ணுமை, பம்மை, பறை, மிருதங்கம், முரசு போன்றவையாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்கூட தன்னுடைய வீரியமிக்க எண்ணங்களைப் பறை, முரசு, சங்கு போன்ற தழிழர்க்குரிய கருவியாகக்கொண்டு தமக்கே உரிய பாணியில் எழுதியுள்ளார். பறை, கருங்கோலி, செங்காலி, வேம்பு, பலா, உலோகம், மண் போன்றவற்றால் செய்யப்படுகின்றன. ஆவின் தோல், ஆட்டுத்தோல், காளையின் தோல் போன்றவையால் போர்த்தப்படுகின்றன. இந்தத் தோல்களை இறுக வளைத்துக்கட்ட தோல் வார்களைப் பயன்படுத்தினர்.

**தண்ணுமை**

தண்ணுமை என்பதற்கு மிருதங்கம் என்று பெயர். மத்து ஒன்பது ஓசைப் பெயர். தளம் என்பது இசையிடனாகிய கருவிகளுக்கெல்லாம் தளமாக இருப்பது. ஆதலால் மத்தளம் என்று பெயர் பெற்றது. பெரும்பாலும் பலாக் குற்றியைக் குடைத்து இக்கருவி செய்யப்படுகிறது. திறந்த இரண்டு முனைகளும் தோலினால் மூடப்பட்டிருக்கும். இசைப்பாட்டிற்கு மட்டும் அல்லாமல் கூத்து நடனம் முதலிய ஆடல்களுக்கும் இது இன்றியமையாதது. ஆகவே, இசைக்கருவிகளில் இது முதன்மையானது. தண்ணுமை, இருகப்பறை என்றும் அழைக்கப்படுகிறது. நீண்டு காணப்படக்கூடிய தண்ணுமை மிகவும் அச்சுறுத்துகின்ற ஒலியை உடையது. நெற்கதிரை அரிக்கும் உழவர்கள் தண்ணுமையைப் பயன்படுத்தியுள்ளனர். மறம் பொருந்திய வீரர்களைப் போரிடுவதற்காக வேற்று நாட்டைவரை அழைக்கும் தன்மையையுடையது தண்ணுமை.

**சங்க இலக்கியத்தில் தண்ணுமை**

தண்ணுமை என்ற இசைக்கருவி சிறப்புகளைப் பற்றிச் சங்க இலக்கியப் புலவர்கள் கையாண்டுள்ளனர்,

**விசியுறு தண்ணுமை (புறம்.89:7)**

**மறப்படை நுவலும் அரிக்குரல் தண்ணுமை**
**(புறம். 270:8)**

**மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே**
**இழிசினனின் தண்ணுமைக் குரலேக் கேட்டாயோ**
**(புறம்:289: 8 -10)**
**குறும்கர்க்கு எறியும் ஏவல் தண்ணுமை**
**(புறம்293: 2)**
**போர்ப்புறு தண்ணுமை ஆர்ப்பு**
**(பதிற்று.ப:84:15)**
**மத்தரி தடாரி தண்ணுமை மகுளி**
**(பரிபாடல்:12:14)**
**வள்ளுயிர்த் தண்ணுமை போல**
**(நற்.310:10)**

**மடிவாய்த் தண்ணுமை தழங்குகுரல் கேட்ட**
**(நற். 298:3)**

**வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்பும்**
**தண்ணுமை வெரீஇய நடந்தாள் நாரை**
**(அகம்: 40 : 13-14)**

**சேக்கோளுக்காகத் தண்ணுமை அறைக்கிறார்கள்**
**(அகம்: 63: 17-18)**

**தண்ணுமையின் பாணி எழுப்புகிறார்கள்**
**(அகம்: 87: 7-8)**

**ஏறுக்கோள் சாற்றுவார் தண்ணுமை**
**(கலி.பா.102:35)**

**அலைக்கும் ஆடவர்கள் தண்ணுமை**
**(நற்.பா. 298:3)**

**வெண்ணல் அரியுநர் தண்ணுமை வெரீஇச்**
**(மலை.471)**

என்ற பாடல் வரிகளின் மூலம் சங்க காலத் தமிழர்கள் தண்ணுமை என்னும் இசைக் கருவியைப் பயன்படுத்தினர் என்பதை அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும் இக்கருவியால் இசைமழை பொழிந்து பெருமை பெற்ற இசைக் கலைஞர்களும், பெருமை பெற்றுவரும் இசைக் கலைஞர்களும் உள்ளனர். இவர்களில் இராமநாதபுரம் முருகபூபதி, பழனி சுப்பிரமணிய அய்யர், உமையாள்புரம் சிவராமன், மலாட்டூர் சாமிய்யார், திருக்காகர்ணம் அரங்கநாயகி அம்மாள், பாலக்காடு மணி, ராமபத்திரன் போன்றோர் சிறப்பிற்குரியோர் ஆவர்.

### பறை

தமிழரின் பாரம்பரிய அடையாளம் தமிழனோடு வாழ்வியல் முறையோடு ஒன்றி கலந்த மிகத் தொன்மையான தோற்கருவி பறையாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக்குரிய கருப்பொருள்களில் பறையும் ஒன்றாகத் திகழ்கிறது. இப்பறை மற்ற தோற்கருவிகளைப் போல தோலால் போர்த்தப்பட்ட கருவியாகும். வாரால் விசித்து இறுகக்கட்டப்பட்டதாகும். இது ஒரு முகமுடையதாக உள்ளது. இரண்டு முகங்களுடனும் இருந்துள்ளது. குறுந்தடி கொண்டு பறையடித்து ஒலி எழுப்புவர். பறை போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப்பறை, பேரோாணப்பறை, தட்டைப்பறை, என்று அழைக்கப்படுகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

குறிஞ்சி - தொண்டகம், முருகியல், குடி
பாலை - துடி
முல்லை - பம்பை ஏறு கோட்பறை
நெய்தல் - சாப்பறை

என்று ஐந்திணைகளின் இடம்பெறும் பறையின் வகைகளைக் குறிப்பிடுகிறார்.

### சங்க இலக்கியத்தின் பறை

ஒரு மன்னன் எதிரிநாட்டுக்கு சென்று போர் புரியும் முன் அங்குள்ள போர் புரியவியலாத மக்களை வெளியேற வேண்டுதல், பெருகிவரும் புனலை அடைக்க, வெற்றி தோல்வியை அறிவிக்க, வயல்களில் உழவு வேலை செய்வோருக்கும் ஊக்கமிக்க, விதைக்க, அறுவடை செய்ய, காடுகளில் விலங்குகளை விரட்ட, மன்னரின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க, இயற்கை வழிபாட்டில் கூத்துகளில் விழாக்களில் இறப்பில் என்று பல்வேறு வாழ்வியல் கூறுகளுடன் பறை இணைந்து இயங்கியுள்ளதற்கான ஆதாரங்கள் சங்க இலக்கியத்தில் நிறைந்துள்ளன. அவை:

**மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்**
**பாடு உலகத்தன்றே, பறைக்குரல் எழினி**
**(அகம்:23)**

**கயிறாடு பறையில் கால்பொரக் கலங்கி**
**(குறுந்தொகை 7)**

**பறைபட பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு**
**(குறுந்தொகை 15)**

**பருவத் தேன் நசைஇப் பல்பறைத் தொழுதி**
**(குறுந்தொகை 175)**

**அவ்வழிப், பறைஎழுந்து இசைப்பப்,.**
**(கலித்.முல்.கலி: 4:28)**

**பறை அறைந்தாங்கு, ஒருவன் நீத்தான்**
**(கலித்.நெய்.கலி:26:12)**

**ஆய்ந்தளவா ஓசை அறையூஉப் பறையறையப்**
**(பரிபாடல்:10: 7)**

**இழுமென மிசைய கோடுதொறும் துவன்றும்**
**(பரிபாடல்: 70: 24)**

**பறைஅறை கடிப்பின் அறை அறையாத் துயில்வர**
**(நற். பா. 46)**

இப்பாடல்வழி பறை இசையின் சிறப்புகளை அறியமுடிகிறது. இப்பறையின் சிறப்பு சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்தில்

மூவிடங்களில் இடம் பெற்றுள்ளது. காட்சிக் காதையில் வேடுவர்கள் குறத்தியர் இசை இசைத்து வரும்பொழுது, பல ஓசைகளோடு பறையை இசைத்தனர்

**பறையிசை யருவி பயன்கெழு மோதையும்**
**(சிலம்பு.25: 28)**

சேரன்செங்குட்டுவன் பகையரசர்களோடு போரிடும் போது பல கருவிகளொலியால் போர் பறையில் ஒலியும் எத்திசைகளிலும் ஒலித்தன எனவும் சிவபெருமான் பறையினை அவுணர்களை அழிக்கும்பொருட்டு முழங்கி கொடுகட்டி ஆடியதையும் அறியமுடிகிறது. பறை விழாக்கள், நிகழ்ச்சிகளில் பறை முக்கிய இடம்பெற்றுத் திகழ்கிறது. கோயில் சார்ந்த நிகழ்ச்சிகளிலும், வாழ்க்கை வட்ட சடங்குகளிலும், அரசியல் பிரச்சாரங்களிலும் இக்கலை நிகழ்த்தப்படுகிறது ஆண்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்ட இக்கலையினைத் தற்போது பெண்களும் இசைத்து வருகின்றனர்.

### கஞ்சிரா

கஞ்சிரா உடும்புத் தோலினால் செய்யப்படும் தோற்கருவியாகும். வனவிலங்குகள் அழித்து இக்கருவியைச் செய்யப்படுவதால் இவ்வகையான இசைக்கருவிகளை விற்பனை பொதுவாக தடை செய்யப்பட்டுள்ளது. சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக் கருவிகளிலும் கிராமிய மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது. கஞ்சிராவை தாடப்பலகை, கனகதப்பட்டை, டேப் தாஸ்ரிதப்பட்டை முதலியனவும் கஞ்சிரா வகையில் சேரும்.

**கடிப்பிடு முரசின் முரசின் முழங்கி இடித்துடித்துப்**
**(குறுந்.பா.270)**

**மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென**
**(மலைபடு: 321)**

**குடித் தொண்டகப் பறைச்சீர்**
**(அகம். 118:3)**

**தொண்டகச் சிறபறைப் பாணி அயலது**
**(நற்.பா.104:5)**

புறநானூறு முதலிய நூல்களில் காணப்படுகிறது கஞ்சிரா (சிறுபறை). இதன் ஒலியினையும், ஒலிக்கப்படும் விதத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இந்த இசையைக் கேட்போர் காது படைத்தோர் பாக்கியவான்கள் என்கிறார் காளிதாஸ் (தினமணி - இசைவிழா மலர் 2008 -2009)

மாமுண்டியா பிள்ளை (1859 - 1922) தமிழகத்தைச் சேர்ந்த இசைக் கலைஞர் ஆவார். மிருதங்கம் 'கஞ்சிரா' தவில் எனும் தோல் கருவிகளை வாசிப்பதில் வல்லவராக விளங்கியவர். கஞ்சிராவின் இசையை தமிழர்களிடம் கொண்டுச் சென்றவர்களில் உடுமலைப்பேட்டை, ஜி.மாரிமுத்தாபிள்ளை, கஞ்சிரா அரிஹறன், வி.நாகராசன், தாயுமானவன் போன்றோர் சிறந்த கலைஞர்கள் ஆவர்.

### முடிவுரை

சங்க கால இசைக் கலையின் தோற்கருவிகளான, தண்ணுமை, பறை, கஞ்சிரா போன்ற இசைக் கருவிகள், மக்கள் எவ்வாறு பயன்படுத்தினர் என்பதும், அவற்றின் சிறப்புகளும் இக்கட்டுரையின் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### பார்வை நூல்கள்

1. சிலப்பதிகாரம். புலியூர்க்கேசிகன் உரை, சென்னை, ஸ்ரீ செண்பக பதிப்பகம்.
2. புறநானூறு. சென்னை, நியூசெஞ்சுரி ஹவுஸ் (பி)லிட்,
3. நற்றிணை. சென்னை, நியூசெஞ்சுரி ஹவுஸ் (பி)லிட்,